ஸ்ரீராம ஜெயம்

# திருப்பதி திருகுடை ஊர்வலம்

நிகழும் விஜய ஆண்டு புரட்டாசி மாதம் 18ம் நாள் 4.10.2013 கவுனி தாண்டுகிறது

பக்த கோடிகளுக்கு...

தமிழக மக்கள் சார்பாக கடந்த ஆண்டுகளை போலவே திருமலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமானுக்கு பிரம்மோத்ஸவ காலத்தில் பதினோறு அழகிய குடைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று சமர்ப்பணம் செய்ய முன்வந்துள்ளது ஹிந்து தர்மார்த்த ஸமிதி.

நிகழும் விஜய ஆண்டு புரட்டாசி மாதம் 18ம் நாள் (4.10.2013) வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு சென்னை தேவராஜ முதலி தெருவில் உள்ள சென்ன கேசவ பெருமாள் கோவிலில் பூஜை நடைபெற்று பிரார்த்தனையுடன் பெருமாளின் அருள் பெற்று இந்த ஊர்வலம் தொடங்க உள்ளது. வழக்கமாக குடை ஊர்வலம் செல்லும் பாதைகள் என்.எஸ்.சி போஸ் ரோடு - கோவிந்தப்ப நாயக்கன் தெரு சந்திப்பு - பைராகி மடம் - வால்டாக்ஸ் சாலை வழியாக வந்து 4.00 மணியளவில் குடைகள் கவுனி தாண்டுகிறது. பிறகு சால்ட் கொட்டகை நடராஜா திரையரங்கம் - செயின்ட் தாமஸ் சாலை - சூளை நெடுஞ்சாலை - அவதான பாப்பையா சாலை - பெரம்பூர் பாரக்ஸ் சாலை - ஸ்ட்ரேன்ஸ் சாலை - ஓட்டேரி - கொன்னூர் நெடுஞ்சாலை - தாக்கர் சத்திரம் - காசி விஸ்வநாதர் ஆலயம் சென்றடையும் (இரவு தங்கல்).

## கீழ்காணும் தேதி, நேரங்களில் குடை செல்லும் பாதைகள்

### 5-10-2013 சனிக்கிழமை

காலை

- 6:00 மணி சிறப்பு பூஜை
- 6:15 மணி காசி விஸ்வநாதர் கோயிலிருந்து புறப்பாடு
- 6:20 மணி விபி காலனி 3வது தெரு
- 6:30 மணி எல்லையம்மன் கோயில் (அயன்புரம் திருவள்ளுவர் நகர்)
- 6:35 மணி ஆதிகேசவ பெருமாள் கோயில் (சோமசுந்தரம் 2வது தெரு)
- 6:40 மணி வெற்றி விநாயகர் கோயில்
- 6:45 மணி கன்னி மூல கணபதி கோயில்
- 6:50 மணி ஆதிகேசவ பெருமாள் கோயில் (ராமநாதன் தெரு)
- 6:55 மணி பாமா ருக்மணி பெருமாள் கோயில்
- 7:00 மணி எஸ்எஸ்தேவர் 2வது தெரு பஜனை கோயில்
- 7:05 மணி கொன்னூர் நெடுஞ்சாலை
- 7:10 மணி இராமானுஜம் நகர்
- 7:20 மணி ஸ்ரீ வாசு புஜ்ய சுவாமி ஜெயின் கோயில்
- 7:35 மணி அயன்புரம் மார்க்கெட்
- 7:50 மணி திருப்பாச்சீஸ்வரர் கோயில் சந்திப்பு
- 8:05 மணி பழனியாண்டவர் கோயில் தெரு
- 8:20 மணி சபாபதி தெரு வழியாக சோலையம்மன் கோயில் தெரு
- 8:35 மணி வீராசாமி மெயின் தெரு
- 8:45 மணி கங்கையம்மன் கோயில் (நியு ஆவடி ரோடு)
- 8:55 மணி பள்ளியரசன் தெரு கிருஷ்ணன் கோயில்
- 9.05 மணி குஜ்ஜீ தெரு பெருமாள் கோயில்
- 9:15 மணி வ.உ.சி நகர் மெயின் ரோடு
- 9:30 மணி குமரன் நகர் குமர குரு கணபதி ஆலயம்
- 9:40 மணி முத்தம்மன் கோவில் தெரு
- 9:50 மணி பரசுராமர் ஈஸ்வரர் கோயில் தெரு
- 10:00 மணி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோயில்
- 10:05 மணி தாகூர் நகர்
- 10:10 மணி ஜசிஎப் பஸ் ஸ்டாண்டு
- 10:15 மணி காந்தி நகர்
- 10:20 மணி ஜிகேஎம் காலனி கோயில்
- 10:30 மணி ஐந்து கோயில்
- 10:35 மணி பெரம்பூர் நரமுக விநாயகர் கோயில்
- 10:40 மணி பேப்பர் மில்ஸ் ரோடு, தச்சர் தெரு
- 10:45 மணி காந்தி சிலை
- 10:50 மணி வீனஸ் பார்க்
- 10:55 மணி அகரம் சந்திப்பு
- 11:00 மணி ஜவகர் நகர்
- 11:15 மணி கார்த்திகேயன் சாலை, சிவா விஷ்ணு ஆலயம்
- 11:25 மணி பாலசுப்பிரமணியம் சாலை
- 11:35 மணி ஜெகநாதர் சாலை
- 11:45 மணி எஸ்ஆர்பி காலனி
- 12.00 மணி பேப்பர் மில்ஸ் ரோடு

பிற்பகல்

- 12:05 மணி திருவிக நகர்
- 12:15 மணி உணவு
- 2:00 மணி புறப்படுதல்
- 2:15 மணி பல்லவன் சாலை வழியாக எம்எச் சாலை
- 3:00 மணி லக்ஷ்மி அம்மன் கோயில் வழியாக எம்பிஎம் தெரு, நெல்வயல் நகர்
- 3:30 மணி நெல்வயல் நகர் முடிவு
- 3.40 மணி பெரம்பூர் ரயில் நிலையம்

மாலை

- 4:20 மணி மேட்டுபாளையம்
- 5:00 மணி எஸ்பி கார்மெண்ட்ஸ் (இஎஸ்ஐ அருகில்)
- 5:40 மணி ஐசிஎப் பஸ்நிலையம்
- 6:10 மணி வில்லிவாக்கம் பஜனை கோயில்
- 6:30 மணி மேட்டுத் தெரு
- 6.50 மணி ரெட்டி தெரு
- 7:15 மணி நாதமுனி திரையரங்கம்
- 7:35 மணி சத்யா நகர்
- 7:45 மணி சிட்கோ நகர் காமாட்சி அம்மன் கோயில்
- 8:15 மணி வில்லிவாக்கம் சவுமிய தமோதரப் பெருமாள் கோயில் (இரவு தங்குதல்)

### 6.10.2013 ஞாயிற்றுக்கிழமை

காலை

- 6:30 மணி சிறப்பு பூஜை (வில்லிவாக்கம்)
- 7:00 மணி புறப்படுதல்
- 8:30 மணி பாடி படவேட்டம்மன் கோயில்
- 8:45 மணி பாடி சிவன் கோயில் மாட வீதி
- 9:00 மணி பிரிட்டானியா கம்பெனி வழியாக
- 9:20 மணி வன்னியர் தெரு
- 10:00 மணி மண்ணூர் பேட்டை பிள்ளையார் கோயில்
- 10:30 மணி மங்கலபுரம் வேணுகோபால் சுவாமி ஆலயம்
- 11:00 மணி அம்பத்தூர் எஸ்டேட் சந்திப்பு
- 11:20 மணி முகப்பேர்

பிற்பகல்

- 12.00 மணி பெருமாள் நகர்
- 12:15 மணி மரகதவல்லி மார்கண்டேஸ்வரர் கோயில்
- 12:30 மணி சந்தான சீனிவாச பெருமாள் கோயில். (மதிய உணவு)
- 2:00 மணி கங்கை அம்மன் கோயில், 6வது பிளாக்
- 2.10 மணி நொளம்பூர் பெருமாள் கோயில்
- 2.15 மணி வானகரம் மெயின் ரோடு
- 2.30 மணி அத்திப்பட்டு கிருஷ்ணர் கோயில்
- 2:45 மணி டன்லப் காமராசர் புரம்
- 3:10 மணி அம்பேத்கார் சிலை ராமர் கோயில்
- 3.30 மணி அம்பத்தூர் பஸ் நிலையம்
- 3:50 மணி அம்பத்தூர் முருகன் கோயில்

மாலை

- 4:20 மணி அம்பத்தூர் விவேகானந்தா வித்யாலையா
- 5:00 மணி திருமுல்லைவாயல் பச்சையம்மன் கோயில்
- 5:30 மணி டிஐ கம்பெனி வழியாக
- 5:40 மணி அர்த்தநாரீஸ்வரர் கோயில்
- 6:00 மணி ஆவடி மார்க்கெட் பெருமாள் கோயில்
- 6:10 மணி கல்யாணராமர் கோயில்
- 6:15 மணி ஆவடி சின்னம்மன் கோயில்
- 6:30 மணி ராமரத்னா தியேட்டர்

இரவு

- 7:00 மணி ஆவடி காமராசர் நகர், வெங்கடேச பெருமாள் கோயில் (இரவு தங்கல்)

### 7.10.2013 திங்கள்கிழமை

காலை

- 6:30 மணி சிறப்பு பூஜை (ஆவடி)
- 7:00 மணி புறப்படுதல்
- 7:30 மணி கவரப்பாளையம்
- 7:50 மணி சேக்காடு சின்னம்மன் கோயில்
- 8:15 மணி அண்ணாநகர் பெருமாள் கோயில்
- 8:45 மணி இந்து கல்லூரி
- 9:00 மணி பிருந்தாவன் காலனி
- 9:15 மணி ஸ்ரீதர பெருமாள் கோயில்
- 9:30 மணி பட்டாபிராம்
- 9:45 மணி பட்டாபிராம் இராமர் கோயில்
- 10:00 மணி வெங்கடேஸ்வரா நகர்
- 10:15 மணி பீமாராவ் நகர்
- 10.30 மணி நாகவல்லியம்மன் கோயில்
- 10:45 மணி தேவராஜபுரம்
- 11:00 மணி திருத்தண்டரை
- 11:15 மணி பிடிஎம்எஸ் பக்தவத்சல பெருமாள் கோயில்
- 11:30 மணி திருநின்றவூர் விவேகானந்தா வித்யாலையா

பிற்பகல்

- 12:00 மணி திருநின்றவூர் பக்தவச்சல பெருமாள் கோயில்
- 12:30 மணி விபி ராமகிருஷ்ணா திருமண மண்டபம் (உணவு)
- 2:00 மணி புறப்படுதல்
- 2:35 மணி வேப்பம்பட்டு
- 2:45 மணி கந்தன் கொள்ளை / தொழுவூர்
- 3:00 மணி தண்ணீர் குளம்
- 3:30 மணி காக்களூர்
- 3.45 மணி லங்காரத் தெரு

மாலை

- 4:00 மணி திருவள்ளூர்
- 4:45 மணி வீர ராகவபெருமாள் கோயில்
- 4:50 மணி வள்ளுவர் புரம்
- 5.10 மணி பஜார் திடல், காந்தி ரோடு
- 5.20 மணி ஜெயா நகர்
- 5:30 மணி புளியங்குப்பம், பெரியகுப்பம்
- 6:00 மணி மணவாளன் நகர்

இரவு

- 7:00 மணி டிஆர்எஸ் திருமண மண்டபம் (இரவு தங்கல்)

### 8.10.2013 செவ்வாய்க்கிழமை

காலை

- 7.00 மணி திருப்பாச்சூர்
- 7:30 மணி கொசவன் பாளையம்
- 8:00 மணி குப்பம்மாள் சத்திரம்
- 8:20 மணி கனகம்மாள் சத்திரம்

பகல் 12:00 மணி திருமலை திருப்பதி

மாலை

3:00 மணி திருகுடைகள் சமர்பணம்

**திருப்பதி பெரிய, சின்ன ஜீயர்களின் முன்னிலையில் ஹிந்து தர்மார்த்த ஸமிதி அறங்காவலர்கள் திருக்குடைகளை தேவஸ்தான சேர்மன் மற்றும் எச்சிகியூடிவ் ஆபீசரிடம் சமர்ப்பிக்கிறோம்**

இந்தக் குடை ஊர்வலம் செல்லுமிடமெல்லாம் மங்களம் பெருகும்: பெருமாளின் அருளால் வறுமை நீங்கும்: நோய் நெடி விலகும்.

### பக்தர்களுக்கு அன்பான வேண்டுகோள்

1. பெருமாளுக்கு சமர்ப்பிக்க வேண்டிய காணிக்கைகளை இக்குடை ஊர்வலத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. எக்காரணம் கொண்டும் குடைகளின் மீது நாணயங்களை வீசுவதோ, காணிக்கை செலுத்துவதோ கூடாது.
3. இக்குடை ஊர்வலம் தனிப்பட்ட வீடுகளுக்கோ, கடைகளுக்கோ வந்து தனிப்பட்ட பூஜையை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவே அதற்காக எந்தக் கட்டணம் எவரிடமும் தரகூடாது. அவ்வாறு எவரிடமாவது பணம் தரப்பட்டால் அதற்கு ஹிந்து தர்மார்த்த ஸமிதி எந்த விதத்திலும் பொறுப்பல்ல.
4. திட்டமிட்ட வழியில் பொதுவாக அந்தத் தெருவிலோ அல்லது சமாஜங்களிலோ, பந்தல் அமைத்து அல்லது கோவில்களிலோ பொதுவான பூஜைக்கு ஏற்பாடு செய்வதானால் அதுபற்றி முன்கூட்டியே கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும்.
5. இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள விரும்பும் பஜனை கோஷ்டிகள், பிரபந்த கோஷ்டிகள், கலை நிகழ்ச்சி குழுக்கள் ஆகியோர் கமிட்டி பொறுப்பாளர்களை தொடர்பு கொண்டு விவரங்களை தெரிவிக்கவும்.
6. பக்தியையும், அமைதியையும், இறையருளையும் ஓங்கச் செய்யும் பொருட்டு நடைபெறுகிற இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள், உடன்வரும் தொண்டர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்துழைக்க வேண்டுகிறோம்.
7. திருமலை சமர்ப்பண குடைகளை கௌரவிக்கும் வகையில் கோயில்களிலிருந்து குடைகள், சாமரங்கள் போன்ற மரியாதை நிமித்தம் அனுப்பி வைக்கின்றவற்றை அவர்களின் பொறுப்பிலேயே ஊர்வலத்தோடு கலந்து கொண்டு தாக்கர் சத்திரம் வரை வந்து திரும்பி விடலாம். அதன் விவரத்தையும் முன்பாகவே தெரிவிக்கவேண்டுகிறோம்.

ஸ்ரீ கோவிந்தன் அருள் பெற அழைக்கிறார் ஆர்ஆர்.கோபால்ஜி

தொடர்புக்கு

**ஹிந்து தர்மார்த்த ஸமிதி டிரஸ்ட்**
12 (43) இராமானுஜம் தெரு, தியாகராய நகர், சென்னை - 17. போன் : 65158708
**044 - 65158708, 9944255228**

குறிப்பு: உண்டியல் வசூல் கிடையாது. நன்கொடைகள் கண்டிப்பாக வாங்கப்படமாட்டாது



ஸ்ரீ ராம ஜெயம்

# அழைப்பிதழ்





## ஹிந்து தர்மார்த்த ஸமிதி டிரஸ்ட் சார்பாக

# திருப்பதி திருகுடை உபய உற்சவ ஊர்வலம்



எஸ்.வேதாந்தம்ஜி
நிர்வாக அறங்காவலர்





ஆர்ஆர்.கோபால்ஜி
அறங்காவலர்

| 4.10.2013 | 4.10.2013 | 8.10.2013 | 8.10.2013 |
|---|---|---|---|
| காலை 10 மணிக்கு ஊர்வலத் துவக்கம் | மாலை 4 மணிக்கு கவுனி தாண்டுதல் | காலை 10 மணிக்கு திருப்பதியை அடைதல் | மாலை 4 மணிக்கு குடைகள் சமர்ப்பணம் |



ஸ்ரீ ராம ஜெயம்





# ஹிந்து தர்மார்த்த ஸமிதி

## டிரஸ்ட் சார்பாக

# திருப்பதி திருகுடை உபய உற்சவ ஊர்வலம்

## திருகுடையின் பெருமை

நாடாண்ட நல்லரசர்களை நாராயணனின் வடிவமாக மதித்து வாழ்ந்தார்கள் முன்னாளில் வாழ்ந்த மக்கள். மக்களை ஆண்ட மாமன்னர்களுக்கு உரிய அடையாளங்களாகச் சில இருந்தன. காவல் மரம், வெண்கொற்றக்குடை, பட்டத்து யானை, பட்டத்துக் குதிரை போன்றவை அவை. இவற்றுள் ஒன்றான வெண்கொற்றக்குடை அரசன் ஆட்சி பரவியிருந்த பகுதி எல்லாவற்றுக்கும் நிழல் தருவது; அந்தக் குடையின் நிழலில் மக்கள் இனிது வாழ்ந்தார்கள் என்பது இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள தகவல்களில் ஒன்றாகும்.

குடை வேறு; மன்னன் வேறு என்று பிரித்துப் பார்க்காமல் குடையையே மன்னனாக மக்கள் மதித்ததற்குச் சில சான்றுகள், புறப்பொருள் இலக்கண நூல்களில் உண்டு. குடை புறப்பட்டால் அரசனே புறப்பட்டதாக அர்த்தம். ‘குடைநாட்கோள்’ என்ற புறப்பொருள் துறை உணர்த்தும் உண்மை இது.

எல்லா உலகங்களையும் காப்பாற்றும் கடவுள் எம்பெருமான். அவர் அரசர்களுக்கெல்லாம் அரசர். சக்கரவர்த்தி திருமகன். சாதாரண மன்னனின் குடையே விசேஷமானதாகக் கருதப்படும் போது ஈரேழு பதினாலு உலகங்களையும் ஆளும் கடவுளான மகா விஷ்ணுவின் திருக்குடைக்கு எனத் தனி மகத்துவம் இருக்குமல்லவா?

எம்பெருமான் பாற்கடலில் ஆடாமல், அசையாமல் பையத் துயில்கிறார். நீரில் தூங்குவதால் நாராயணன் என்ற பெயர் பெறுகிறார். (நாரம் என்றால் நீர் என்று பொருள்) நாராயணன் துயிலும் மெத்தையாக இருப்பது எது தெரியுமா? ஆயிரம் தலை உடைய ஆதிசேஷன் என்ற பாம்பு தான். அவர் துயிலும் படுக்கை. அறி துயில் அமரப் படுக்கையாக இருக்கும் ஆதிசேஷன் தான் பெருமாள் செல்லும் போது திருக்குடையாகிறார் என்பது வைஷ்ணவ சம்பிரதாயம்.

ஆதிசேஷனுக்கும், மகா விஷ்ணுவுக்கும் உள்ள சம்பந்தத்தைப் புராணங்கள் சொல்லியிருக்கின்றன.

★ பெருமாள் எழுந்தருளும் போது திருக்குடையாக இருக்கிறார்.

★ உட்காரும் போது சிம்மாசனமாக இருக்கிறார்.

★ நிற்கும் போது பாதுகையாக இருக்கிறார்.

★ பாற்கடலில் படுத்துறங்கும் போது படுக்கையாக இருக்கிறார்; மணிவிளக்காக இருக்கிறார்; தெப்பமாக மிதக்கிறார். இவைகள் எல்லாம் திருமாலுக்காக ஆதிசேஷன் மேற்கொள்ளும் நிலைகள் என்கிறார் முதலாழ்வார் மூவரில் ஒருவரான பொய்கையாழ்வார்.

குடையின் பெருமையை, சத்ரம் வருஷ ஆத பத்ராணம் என்ற வடமொழிச் சுலோகத் தொடர் விளக்குகிறது. மழையிலிருந்தும் வெயிலிருந்தும் மக்களைக் காப்பாற்றக் குடை பயன்படுகிறது.

தெய்வத்துக்கு உரிய பொருள்களில் சில பொருள்களை மங்களகரமானவை என்பர். எட்டு வகையான பொருள்களை அட்டமங்கலம் என்பார்கள். குடை அட்டமங்கலங்களில் ஒன்றாகும்.

திருமலை வாசருக்குக் குடைகளை ச் சமர்ப்பிப்பது புண்ணிய கைங்கரியங்களில் சிறந்ததாகும். திருக்குடைகளைச் சமர்ப்பிப்பவர்களும் அதற்குத் துணை செய்பவர்களும், தரிசிப்பவர்களும் துன்பங்களிலிருந்து நீங்குவார்கள். எல்லா நலன்களும் அடைவார்கள். இறைவன் அருள் நிழலில் வாழ்வார்கள் என்பது நிச்சயம்.

ஹிந்து தர்மார்த்த ஸமிதி டிரஸ்ட் ஸ்தாபனம் சார்பில் கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும், திருமலையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீவெங்கடேசப் பெருமானுக்கு, பதினோறு அழகிய குடைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று பிரம்மோத்ஸவ காலத்தில் தமிழக மக்களின் சார்பாக சமர்ப்பணம் செய்ய திட்டமிட்டுள்ளது.

நாள் : நிகழும் விஜய ஆண்டு புரட்டாசி மாதம் 18ம் நாள் (4.10.2013), வெள்ளிக்கிழமை காலை 10 மணி

இடம் : சென்னை தேவராஜ முதலி தெருவில் (பூக்கடை காவல் நிலையம் அருகில்) உள்ள **சென்ன கேசவ பெருமாள் கோவில் வளாகம்**.

வரவேற்புரை
திரு. ஜி. ஆளவந்தார் அவர்கள்
விஷ்வ ஹிந்து பரிஷத் மாநில தலைவர்

தலைமை
திரு. ஆர்.நட்ராஜ், ஐ.பி.எஸ்., அவர்கள்
தலைவர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (ஓய்வு), முன்னாள் டி.ஜி.பி.,

முன்னிலை
திரு. பி.ஆர். குமார் அவர்கள்
குமரன் சில்க்ஸ், சென்னை

திரு. ப.தனபால் எம்.ஏ.,பி.எல்., அவர்கள்
ஆணையாளர், இந்து அறநிலையத்துறை

ஆசியுரை
தவத்திரு செந்தில் துறவி அவர்கள்

ஊர்வலத்தை துவக்கி வைக்கும் சிறப்பு அழைப்பாளர்
மாண்புமிகு நீதியரசர் திரு. வி.ராம சுப்ரமணியன் அவர்கள்
சென்னை உயர்நீதிமன்றம்

சிறப்புரை
மானனீய ஸ்ரீ எஸ். வேதாந்தம்ஜி
நிர்வாக அறங்காவலர்
ஹிந்து தர்மார்த்த ஸமிதி

திரு. ஆர்.எஸ். நாராயணசுவாமி
விஷ்வ ஹிந்து பரிஷத்
மாநில செயல் தலைவர்

தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து இவ்விழாவில் பங்கு கொண்டு ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் திருவருளைப் பெற அழைக்கிறோம்.

ஹிந்து தர்மார்த்த ஸமிதிக்காக,
தங்கள் அன்புள்ள,
ஆர்ஆர். கோபால்ஜி
அறங்காவலர்.